# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8082805

02/2024/AC/CB

1. District : மாவட்டம் Coimbatore  PS: காவல்நிலையம் Vigilance and Anti corruption  Year: ஆண்டு 2024  FIR No.: மு.த.அ. எண்  Date: நாள் 21.05.2024

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: The prevention of corruption Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 23.03.2024  Date to : நாள் வரை 20.05.2024

   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 20.00hrs  Time to : நேரம் வரை 20.00hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.05.2024  Time : நேரம் 08.30hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-I  Time : நேரம் 08.30hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Computer typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  at about 50kms at South pollachi municipality office

   Beat Number : முறைக் காவல் எண் –  (b) Address : முகவரி –

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Naseema  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் D/o Sardar Ali

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 28/2024  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில்  (g) Address : முகவரி D.No. 25, Krishna mill Lane, Jamine uthukulli, meenKarai Road, Pollachi Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   K. yogendran Bill collector, municipality office pollachi. coimbatore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   – No delay

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :-
∴ Separate Sheets enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

21.05.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 21.05.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at 10.10hrs

Name: பெயர் D. SHEELA
Rank: நிலை Inspector of police
Vigilance and Anti-corruption, Coimbatore
21.05.2024.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2024/ AC/CB, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

இன்று 21.05.2024-ம் தேதி செவ்வாய்கிழமை 08.30 மணிக்கு காவல் ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர், பொள்ளாச்சி, மீன்கரைரோடு, ஜமீன்ஊத்துக்குளி, கிருஷ்ணா மில் லேன், க.எண்.25, என்ற முகவரியில் குடியிருந்து வரும் சர்தார் அலி என்பவரது மகள் S.நசீமா என்பவர் நிலையம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சுசெய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் வரி வசூலராக பணிபுரிந்து வரும் திரு.யோகேந்திரன் என்பவர், புகார்தாரரின் சொத்து பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பத்தை கள ஆய்வு முடித்து பரிந்துரை செய்வதற்காக 6,000/- ரூபாய் லஞ்சமாக பணம் கேட்டிருப்பது தெரியவந்தது. புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 21.05.2024-ம் தேதி 09.00 மணி முதல் 09.45 மணி வரை கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2024/AC/CB, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரி திரு.K.யோகேந்திரன் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின்

புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புனர், S.நசீமா, வயது 28, த/பெ. சர்தார்அலி, க.எண்.25, கிருஷ்ணா மில் லேன், ஜமீன்ஊத்துக்குளி, மீன்கரைரோடு, பொள்ளாச்சி, கோயம்புத்தூர். தற்காலிக முகவரி: க.எண். 107/97, CTC காலனி, கோட்டூர் ரோடு, பொள்ளாச்சி-1, பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர், அம்மா/ஐயா, நான் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி கோட்டூர் ரோடிலுள்ள உள்ள CTC காலணியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 6 வருடங்களாக வழக்குரைஞர் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 12.05.2023-ம் தேதி பொள்ளாச்சியை சேர்ந்த திரு.பழனிச்சாமி என்பவரது மகன் திரு.நாகராஜ் என்பரிடமிருந்து அவருக்கு சொந்தமான கதவு எண்.88, எம்.ஜி.ஆர் நகர், ஜோதி நகர், பொள்ளாச்சி டவுன் என்ற முகவரியில் அமைந்துள்ள 771 சதுரடி அளவுள்ள வீட்டினை ரூ.3,50,000/-த்திற்கு எனது பெயரில் வாங்கி அதை பொள்ளாச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.5935/2023 ஆக பதிவுசெய்துகொண்டேன். அதன்பின்னிட்டு மேற்படி சொத்தின் மீதான, பொள்ளாச்சி நகராட்சியில் மேற்படி திரு.நாகராஜின் பெயரில் நிலுவையில் இருந்த சொத்துவரி தொகை ரூ.2892/-ஐ கடந்த 21.08.2023-ம் தேதி நான் செலுத்தி அதற்கான ரசீதை பெற்றுக்கொண்டேன். அதன்பின்னர் கடந்த 15.02.2024-ம் தேதி மேற்படி சொத்து வரியை எனது பெயரில் மாற்றம் செய்வதற்காக கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள தகவல் மையத்திற்கு சென்று சொத்து வரியை பெயர்மாற்றம் செய்வது குறித்து கேட்டபோது, சொத்து வரி நிலுவை தொகை ஏதேனும் இருப்பின் அதை செலுத்திவிட்டு, கொடி நாள் நிதி மற்றும் பெயர்மாற்ற கட்டணம் ஆகியவற்றை செலுத்துமாறு அறிவுறுத்தியதின் பேரில் நான் அன்றைய தினமே சொத்து வரி நிலுவை தொகையான ரூ.56/-, கொடி நாள் நிதியாக ரூ.100/- மற்றும் சொத்து பெயர் மாற்றக்கட்டணமாக ரூ.500/- ஆகியவற்றை செலுத்தி அதற்கான ரசீதுகளை பெற்றுக்கொண்டேன். அதன்பின்னர் கடந்த 14.03.2024-ம் தேதி பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று மேற்படி சொத்துவரி பெயர் மாற்றம் குறித்து விசாரித்தபோது, அவ்வலுவலக வருவாய் ஆய்வாளர் திரு.கொங்குராசு என்பவரின் செல்போன் எண்ணான 9442017515-ஐ என்னிடம் கொடுத்து அவரிடம் எனது விண்ணப்பத்தை குறித்து விபரம் கேட்டு தெரிந்துகொள்ளும்படி தெரிவித்தனர். அதன்படி நான் அன்றைய தினமே எனது செல்போன் எண்ணான 7502847680-லிருந்து

அவரது செல்போன் எண்ணான 9442017515-க்கு அழைத்து, எனது விண்ணப்பம் குறித்து கேட்டபோது, அவர் வருட கடைசி என்பதால் அனைவரும் வரி வசூல் வேலைகளில் பிசியாக இருப்பதாகவும், எனது விண்ணப்பம் சம்மந்தமாக பொள்ளாச்சி நகராட்சியின் எனது வார்டுக்கான வரி வசூலர் திரு.யோகேந்திரன் என்பவர் உங்களை தொடர்பு கொள்வார் என்று என்னிடம் தெரிவித்தார். அதன்படி 23.03.2024-ம் தேதி சுமார் 12.00 மணியளவில் திரு.யோகேந்திரன் என்பவர் அவரது செல்போன் எண்ணான 9788361522-லிருந்து என்னை தொடர்புகொண்டு மேற்படி சொத்தினை கள ஆய்வு மேற்கொள்ள வந்திருப்பதாகவும், அதனை வந்து அடையாளம் காண்பிக்கும்படியும் தெரிவித்தார். நான் எனது அலுவலில் வேலையாக இருந்ததால் என்னுடன் பணிபுரியும் எனது நண்பரான திரு.பிரசாத்குமார் என்பவருக்கு நான் தகவல் தெரிவித்து அவரை எனது சொத்தை அடையாளம் காண்பிக்க வருவார் என்று வரி வசூலரிடம் தெரிவித்தேன். அதன்படி திரு.பிரசாத்குமார் என்னுடைய வீட்டை அடையாளம் காண்பித்தார். நான் வாங்கிய மேற்படி சொத்தினை கள ஆய்வு செய்த வரி வசூலர் திரு.யோகேந்திரன் கள ஆய்வு முடித்தபின் என்னுடைய விண்ணப்பித்தினை பரிந்துரை செய்வதற்கு நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் தவிர அவருக்கு தனியாக பணம் கொடுக்க வேண்டும் என்று திரு.பிரசாத்குமாரிடம் தெரிவித்துள்ளார். அதற்கு திரு.பிரசாத்குமார், பணம் பற்றி மேடமிடம் பேசிக்கொள்ளுமாறு வரிவசூலரிடம் தெரிவித்துள்ளார். அதன்படி 23.03.2024-ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் வரிவசூலர் திரு.யோகேந்திரன் என்பவர் அவரது செல்போனிலிருந்து என்னை தொடர்பு கொண்டு கள ஆய்வு முடித்துவிட்டதாகவும், விண்ணப்பத்தினை பரிந்துரைக்க ரூ.6,000/-ம் அவருக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு கொடுக்க வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் என்ன மேடம் நீங்க அட்வகேட்தானே, உங்களுக்கு எங்கள் ஆபீஸ் பார்மால்ட்டீஷ் தெரியாதா என்று சொல்லி, Voice call-ல் பேசிட்டு இருக்கோமா, இனிமேல் Whats App call-ல் பேசுவதாக சொல்லி போனை கட்செய்துவிட்டார். அதன்பிறகு வரிவசூலர், என்னை தொடர்ந்து Whats app call-ல் பலமுறை அழைத்தார். ஆனால் நான் போனை எடுக்கவில்லை. கடந்த ஏப்ரல் மாதத்தில் எனது விண்ணப்பத்தின் நிலை குறித்து ஆன்லைனில் பார்த்தபோது, மேற்படி சொத்தானது திரு.நாகராஜ் பெயரிலேயே இருந்ததால் நான் 30.04.2024-ம் தேதி மீண்டும் வருவாய் ஆய்வாளர் திரு.கொங்குராசு அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் எனது விண்ணப்பத்தின் விபரம்

கேட்டபின்னர், என்னை லைனிலேயே இருங்கள் என்றும் போனை திரு.யோகேந்திரனிடம் கொடுப்பதாக சொல்லி அவரிடம் கொடுத்தார். வருவாய் ஆய்வாளர் அவர்களின் செல்போனிலிருந்து என்னிடம் பேசிய வரி வசூலர் திரு.யோகேந்திரன் என்னிடம், நான் ஏற்கனவே பார்மால்ட்டீசை சொல்லிட்டேனே மேடம் நேரில் வாங்க பேசிக்கலாம் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். அதன்பின்னர் 04.05.2024-ம் தேதியன்று வரி வசூலர் திரு.யோகேந்திரன் அவர்களை செல்போனில் தொடர்புகொண்டு எனது விண்ணப்பம் நிலை குறித்து கேட்டபோது, அன்று விடுமுறை என்று சொல்லிவிட்டு 06.05.2024-ம் தேதியன்று காலை என்னை அவரது செல்போனிலிருந்து என்னை தொடர்புகொண்டு, அவர் காலை 10.30 மணியளவில் அலுவலகத்திற்கு வந்துவிடுவதாகவும், அவரை நேரில் வந்து அலுவலகத்தில் பார்க்குமாறு தெரிவித்தார். நான் அன்றைதினம், என்னுடன் பணிபுரிந்து வரும் திரு.பிரசாத்குமார் என்பவர் வருவார் என்ற விபரத்தை தெரிவிக்க சுமார் 11.00 மணியளவில் வரி வசூலர் திரு.யோகேந்திரன் அவர்களை எனது செல்போனியில் தொடர்புகொண்டு தெரிவித்தேன். அதற்கு அவரும் சரி என்று சொல்லி வரச்சொல்லுங்கள் என்று எண்ணிடம் தெரிவித்தார். வரி வசூலர் என்னை மீண்டும் தொடர்புகொண்டு அவரை பார்க்க வரும்பொழுது UGD-க்கு ரூ.2,000/-த்தை செலுத்திவிட்டு அதன் ரசீது மற்றும் அவர் ஏற்கனவே கேட்டிருந்த ரூ.6,000/-த்தையும் கொண்டு வருமாறு தெரிவித்தார். அதன்படி அன்று காலை சுமார் 11.30 மணியவில் திரு.பிரசாத்குமார் பொள்ளாச்சி நகராட்சி அலுவலகம் சென்று வரி வசூலர் திரு.யோகேந்திரன் அவர்களை சந்தித்து எனது விண்ணப்பம் குறித்து கேட்டபோது, திரு.பிரசாத்குமாரிடம் வரி வசூலர் தான் மேடத்திடம் கேட்ட பணத்தை கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டுள்ளார். அதற்கு திரு.பிரசாத்குமார் பணம் குறித்து மேடம் எதுவும் சொல்லவில்லை என்று சொல்லியுள்ளார். அதற்கு வரி வசூலர் திரு.யோகேந்திரன் ரூ.6,000/-ம் பணத்துடன் வந்தால்தான் விண்ணப்பத்தை பரிந்துரை செய்து கொடுப்பேன் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன்பிறகு 15.05.2024-ம் தேதியன்று Whats App call மூலம் வரி வசூலர் திரு.யோகேந்திரன் அவர்களை தொடர்பு கொண்டு எனது விண்ணப்பம் குறித்து கேட்டபோது அவர் ஒரு condolence-ல் இருப்பதாகவும், 20.05.2024-ம் தேதி அலுவலகம் வந்தபின் என்னை அழைப்பதாகவும் தெரிவித்தார். 20.05.2024-ம் மாலை சுமார் 6.15 மணியளவில் வரி வசூலர் திரு.யோகேந்திரன் அவர்கள் என்னை செல்போனில் அழைத்து இன்று 21.05.2024-ம்

தேதி காலை UGD-க்கு பணம் செலுத்திய ரசீது மற்றும் ரூ.6,000/- பணத்துடன் வந்து பார்க்குமாறு சொன்னார். நான் யோசித்து பார்த்த போது பெயர்மாற்றம் செய்வதற்கு பரிந்துரைக்க பொள்ளாச்சி நகராட்சி வரி வசூலர் திரு.யோகேந்திரன் அவர்களுக்கு ரூ.6,000/- லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.6,000/-ம் லஞ்சம் கேட்கும் மேற்படி பொள்ளாச்சி நகராட்சி வரி வசூலர் திரு.யோகேந்திரன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன். இடம்: கோயம்புத்தூர், நாள் : 21.05.2024 இப்படிக்கு, sd.XXXXX 21/05/2024 (S.Naseema). Respected Madam, Received the complaint on 21.05.2024 at about 08.30 hrs. sd.XXXXX, 21/05/2024, Inspr., V&AC, CBE. Respected Madam, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.02/2024/AC/CB, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 21.05.2024 between 09.00 hrs and 09.45 hrs. sd.XXXXX, 21/05/2024, Inspr., V&AC, CBE. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

21/05/2024

(D.ஷீலா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.